Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (10 - 03 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 20

## 44 வருட சுதந்திர ஆட்சியில் 44 வருடம் ஜனாதிபதி ஆட்சி

(டெல்லி)

இந்தியாவில் இதுவரை மத்தியிலும் மாநிலங்களிலும் 95 முறைகள் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் 44 ஆண்டுகள் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றுள்ளது. 44 ஆண்டுகள் இந்தியக் குடியரசின் வயதை ஒத்தது எனபது குறிப்பிடத்தக்கது.

## மூன்று புளொட் பலி ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(வவுனியா)

தாண்டிக்குளம் காவலரணிற்கு அருகே பொதுமக்களைச் சோதனையிட முயன்ற மூன்று புளொட் உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பலியாகியுள்ளனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் வவுனியா மாவட்டத்திலுள்ள தாண்டிக்குளம் காவலரணில் இருந்து 300 யார் தூரத்தில் வைத்து பொதுமக்களைச் சோதனையிட முயன்ற மூன்று புளொட் உறுப்பினர்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் மூவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ரி 81 ரகத் துப்பாக்கி 1, மகஸின் 4, ஐ. எம். ரவைகள் 85 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (மு)

## நெல் ஏற்றிவந்த லொறி மீது தும்பன்கேணியில் ஹெலி தாக்கு

(மட்டக்களப்பு)

நெல் ஏற்றிவந்த லொறி ஒன்றின்மீது தும்பன் கேணியடிப் பகுதியில் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் லொறி நடத்துனர் கொல்லப்பட்டுள்ளார். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் தும்பன்கேணியடியில் நெல்லேற்றி வந்த லொறி மீது ஹெலியில் இருந்து கட்பச்சிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் லொறி நடத்துனர் திருதி அமரசிவம் (30, பெரிய கல்லாறு) என்பவர் கொல்லப்பட்டார்.

திலகரட்ணம் உதயகுமார் (25) 35ஆம் கிராமம், மதியாபரணம் சிவபாலன் (29) 39 ஆம் கிராமம், சந்திரசேகரம் சசிகுமார் (12) மாணவன் ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர். (மு)

## மீனவரைத் தாக்கிய கடற்படை நடுக்கடலில் தத்தளிக்க விட்டது

மீன் பிடிக்கச்சென்ற கடற்றொழிலாளர் இருவர் கடற்படையினரால் கொடூரமாகத் தாக்கப்பட்ட பின்னர் நடுக்கடலில் தத்தளிக்க விடப்பட்டனர்.

திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து முள்ளிவாய்க்காலில் வாடி அமைத்து மீன்பிடிக்கும் அகதிகளுக்கே இக்கதி நேர்ந்தது.

துரையன் (36 வயது), ஞ்சன் (42 வயது) ஆகிய இருவரும் கடந்த 4ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கடல் பகுதியில் படகில் மீன் பிடிக்கச் சென்ற சமயம் கடற்படையி

(4ஆம் பக்கம் பார்க்க)

## முட்டிச்சேனையில் இராணுவத்தால் ஒருதமிழர் சுட்டுக்கொலை 10 வீடுகளுக்கு தீவைப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் முட்டிச்சேனைப்பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவிப்பொதுமகனொருவரை சுட்டுக்கொன்றதோடு பொதுமக்களின் பத்து வீடுகளையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் நேற்றுக் காலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேட்டோர் தாக்குதலுக்கு கணவன் மனைவி படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹெலியில் இருந்து மோட்டோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் கணவனும், மனைவியும் படுகாயமடைந்ததோடு வீடொன்றும் சேதமடைந்தது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 12-45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அலியார் வெட்டை, கல்வெட்டை, விளாந்தோட்டம் ஆகிய பகுதிகளில் ஹெலியில் இருந்து ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நகரில் இருந்து குடியிருப்புக்கள் மீது ஷெல்வீச்சு

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுமுன்தினம் காலை 11-30 மணியில் இருந்து 12.30 மணிவரை மகாரம்பைக்குளம், புகைவீதி ஆகிய பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் கோக்குவேலிப் பகுதியை நோக்கி ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து பிற்பகல் 2-30 மணி தொடக்கம் பூந்தோட்டம் தாண்டிக்குளம், மூன்றுமுறிப்பிலிருந்து சாஸ்திரிகூழாங்குளம் பகுதியை நோக்கி ஐந்து ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

இரவு எட்டுமணியிலிருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைத் திணைக்களம் விசேட பரீட்சை நடாத்த ஏற்பாடு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலே கடந்த ஆண்டில் நடாத்தப்படாத பரீட்சைகளை நடத்துவதற்கான ஒழுங்குகளைப் பரீட்சைத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கொழும்பில் இது தொடர்பான மாநாடொன்று நேற்று நடைபெற்றது.

வடக்கிலும் கிழக்கிலும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைகள் இந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெறும். தமது சொந்த ஊர்களில் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்கு, கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், பொலநறுவ ஆகிய நகரங்களில் விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார். இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கென ஏற்கனவே விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள், வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே அப்பரீட்சைகளுக்குத் தோற்றலாம். இப்பரீட்சைக்குத் தமிழ் மொழி மூலம் 20,000 மாணவர்கள் தோற்றுகிறார்கள். கடந்த ஆண்டு ஆகஸ்ட் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றாத வடக்கு கிழக்கு மாணவர்களுக்கான விசேட பரீட்சை ஒன்றை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம் லெப். வீரா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் இருந்து நேற்றுக்காலை 10.20மணியளவில் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் லெப். வீரா (தம்பிமுத்து தர்மசீலன் ஏழாலை) எனபவர் வீரமரணம் அடைந்துள்ளார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## வன்னிப் பிரதேசத்தில் சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், வவுனியா புளியங்குளம் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உதயசூரியன் கலையரங்கம் ஆகிய இடங்களில் நடாத்தப்பட்ட எழுச்சி விழாக்களில் சிறப்புச் சொற்பொழிவுகள், பெண் விடுதலையைச் சித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரத்தை கட்டி எழுப்ப பெண்கள் முன்வர வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கல்வி விருத்தியுடன் பொருளாதார விருத்தியிலும் பெண்கள் ஈடுபட வேண்டும். தொழிற்கல்வி, தொலைக் கல்வி மூலம் சமுதாயத்தின் பொருளாதாரத்தைக் கட்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் கடற்படை எச்சரிக்கை உடன் வீடு திரும்பா விட்டால் வீடுகள் தகர்க்கப்படும்

(புங்குடுதீவு)

நயினாதீவில் இருந்து ஸ்ரீலங்கா கடற்படையின் அட்டூழியத்தினால் வெளியேறியுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் வீடுகளுக்குத் திரும்பவில்லையென்றால் குறிப்பிட்ட குடும்பங்களின் வீடுகளைக் குண்டு வைத்து தகர்ப்பதும், தீயிட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டரை இலட்சம் மாணவர்களின் 42நாள் உணவு முத்திரைக்கு நடவடிக்கை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள மாணவருக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் 1991 வைகாசி 18ஆந் திகதியுடன் முடிவுற்றது. தற்போது இத்திட்டம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த உணவு முத்திரை 1991 வைகாசி மாதம் வரை உரியதென்றே அறிவிக்கப்பட்டுள்ளது.

1990 வைகாசி 18ஆந் திகதிக்குப் பின்னர் பாடசாலைக்குச் சமுகம் தரும் மாணவருக்கு நாளொன்றுக்கு ரூபா 3 வீதம் பணம் செலுத்தப்படும் என்றும், அப்பணம் உணவு முத்திரையாக இருக்கும் என்றும் சுற்றுநிருபம் தெரிவிக்கின்றது.

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் யுத்தம், ஊரடங்குச் சட்டம் காரணமாகத் தொடர்ச்சியாக நடைபெற

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாயாரைத் தாக்கிவிட்டு மகன் தற்கொலை

(சித்தன்கேணி)

தாயாருடன் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து மனமுடைந்த மகன் கருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை வட்டுக்கோட்டை சித்தன்கேணிப்பகுதியில் நடைபெற்றது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது சம்பவதினம் காலை தாயாருக்கும் மகனுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டது. இத்தகராறு முற்றியதால் மகன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கொழும்பு ஸ்ருடியோ

புளொக் (Block) புகைப் படம் றபர் சீல், கலர்ப்படம், ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள் ஸ்ரிக் கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்,

(B-2090)

### பரஸ்கோ

பருத்தித்துறை வீதியிலுள்ள கல்வடப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக் கூடிய 4 1/2 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு லேத் மிஷின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-பரஸ்கோ ஸ்தாபனம், முத்திரைச் சந்தை. நல்லூர். (B-2097)

### கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு கற்பிக்க விரும்புபவர்களுக்கு 60 மணித்தியாலப் பயிற்சியுமளிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோசேந்திரா வீதி, சுண்டுக்குளி.

(R/1161)

### தவறிவிட்டது

04.03.91 காலை 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் சுன்னாகம் - புன்னாலைக் கட்டுவன் வீதி வைரவர் கோவிலுக்கு இடையில் கறுப்பு நிற பேர்ஸ் பணத்துடனும் சாவிகள் அடையாள அட்டைகளுடனும் தவறிவிட்டது. இந்தப் பேர்ஸை ஸை ரங்கநாதன் கடைக்கு அருகில் மண்ணிற சேட், கறுப்பு காற்சட்டை போட்ட நபர் எடுத்ததாக அறிந்தேன். அவர் தயவு செய்து திருமதி T. பொன்னுத்துரை 'அம்பிகை பவனம்' பலாலி வீதி திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(R-1167)

பெப்ரவரி முதல் வாரத்தில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவர் இரு கைப்பைகளைத் தவற விட்டுவிட்டார், புடைவைகள், குழந்தைகளுக்குரிய புதிய உடைகள், பிறநாட்டு கடிதங்கள், படங்கள். இரும்புத் திறப்புகள் இருந்தன. கடிதங்கள், படங்கள், திறப்புகளை யாவது எடுத்தவர்கள் இராஜலிங்கம் இளைப்பாறிய தபால் அதிபர் தாண்டிக்குளத்தில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(R/1165)

### தேவை

இலுப்பை அரப்புத் தேவை: தொடர்பு-மில்க்வைற்- யாழ்ப்பாணம். (B-2121)

# பணச் சுற்றோட்ட வீதம் பல மாதங்களின்பின் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல மாதங்கள் இடைவெளியின் பின் தற்போது திரவநிலையிலான பணச்சுற்றோட்ட விகிதம் அதிகரித்துளளது. இவ்வாறு வங்கி முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக திரவநிலைப் பணப் புழக்கவிகிதம் பத்து வீதமாகவே இருந்து வந்துள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமம் அடைந்தனர். தற்போது பணப் புழக்கவீதம் சுமார் 25 வீதமாக உயர்ந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வங்கி, வர்த்தக நிலையங்கள், பொதுமக்கள் ஆகியோரிடையே திரவநிலைப் பணத்தின் சுற்றோட்டம் அதிகரித்துள்ளது. எனினும் இந்த அதிகரிப்பு பொதுமக்களின் பணம் கை

## காணவில்லை

சறுபபையா நாகேஸ்வரி என்ற 12 வயது சிறுமியை 13 02-91 தொடக்கம் தகவல் தருபவரின் வீட்டிலிருந்து காணவில்லை. உயரம் 4 அடி. மெல்லிய தேகம். பொது நிறம். இவர் தனது சொந்த இடமான உருத்திரபுரம் எள்ளுக்காட்டிற்கு புறப்பட்டு சென்று இதுவரை போய்ச் சேரவில்லை. இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அருகிலுள்ள தமிழீழ விடுதலை இயக்க மக்கள் காரியாலயத்தில் அறிவிக்கவும்.

தகவல்:-

த. சுப்பிரமணியம்
8, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(R-1169)

யாள்வது தொடர்பான சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஈ

## கருத்தரங்கும் கலைநிகழ்ச்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் 856 சனசமூக நிலையங்களிலும் பௌர்ணமி தினங்களில் காலை அறிவியல் கருத்தரங்குகளும், மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இதற்கான பணிப்புரையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா விடுத்துள்ளார். (ஈ1)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. சின்னப்பு அலோசியஸ்

தோற்றம் 01-08-1945 மறைவு 10-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, பாதுகாவலனாய் அன்பனாய், பாசமுள்ள தந்தையாய் எமை நேசித்த எம் அன்புத் தெய்வத்தின் இனிய நினைவுகள் என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும். எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காய் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
உறவினர்கள்,

16/3 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(R/1163)

## மணமகள் தேவை

வீடியோப்படம் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டவரும் வீடியோ ஸ்தாபனம் ஒன்றின் உரிமையாளருமான படித்த அழகிய மணமகனுக்கு;

படித்த அழகிய நற்குணமுள்ள மணப்பெண் தேவை எம் மதமும் எவ் இனமும் சம்மதம். (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது) ஜாதகம் மற்றும் புகைப்படத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

வி. எம். பத்மநாதர்
நுணாவில் கிழக்கு
கல்வயல் றோட்,
சாவகச்சேரி.

(R/ 1166)

## யாழ். மாநகர சபை

### பெரியகடை, சத்திரச்சந்தைக் கடைகள் பற்றிய பொது அறிவித்தல்

பெரியகடை, சத்திரச்சந்தைப் பகுதிக்குள் சேதமடைந்த கடைகளுக்குப் பதிலாக மாற்றிடங்களில் தமது சொந்தச் செலவில் கடைகளை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் 27-03-1991க்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது; விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் அங்கீகாரம் பெற்ற குத்தகைக்காரர்களாக இல்லாதவிடத்து மாநகரசபையின் குத்தகை சீராக்கல் திட்டத்தின் கீழ் நெறிப்படுத்திய பின்னரே இவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

குறிப்பு: 01. விண்ணப்பதாரர்கள் அனைவரும் யூன் 1990 வரையான வாடகை நிலுவைகளை முற்றாகச் செலுத்தியிருத்தல் வேண்டும்.

02. நவீனசந்தை விஸ்தரிப்பின் போது தமக்கென ஒதுக்கப்பட்ட இடப்பரப்பை எந்தவித நஷ்டஈடும் கோராது விட்டு நீங்குவேன் என உறுதியளித்து ஒப்பந்தம் ஒன்றினையும் விண்ணப்பதாரர் தமது செலவில் நிறைவேற்றிக் கொடுத்தல் வேண்டும்.

க. தர்மலிங்கம்
மாநகர ஆணையாளருக்காக
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 08-03-1991.

(B/2122)



## நினைவு கூருகின்றோம்

மார்ச் 10



லெப்டினனட் ரவிக்குமார்

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பில் விசேட அதிரடிப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த
லெப்.ரவிக்குமார் (யோகராசா-கல்லடி, மட்டக்களப்பு)
அன்ரனி (கல்லடி, மட்டக்களப்பு)

இதே ஆண்டு துணுக்காயில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது வீரமரணமடைந்த
2ஆம்லெப். பெரியதம்பி (சி. மதியழகன்-துணுக்காய்)
கருணை (ஆ. பாஸ்கரன் - வவுனிக்குளம்)

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
றோஸ்மன் (சி. பாஸ்கரன் -முத்தையன்கட்டு)
மகேஸ் (பா. மகேஸ்வரன் - காரைதீவு)

1989ஆம் ஆண்டு வட்டக்கச்சியில் நடந்த இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் வீரமரணமடைந்த
ரமேஸ் (பசுபதி மணிவண்ணன் - வட்டக்கச்சி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(B-2115)

## தாதிப் பயிற்சி நெறி
## DIPLOMA IN NURSING

### விண்ணப்பத் திகதி இன்று வரைநீடிக்கப்பட்டுள்ளது

I. ஒன்றரை வருடகால பயிற்சி நெறி
II. சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
III அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்
IV. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

சாயி மெடிக்கல் அக்கடமி
(பதிவு செய்யப்பட்டது)
அதிபர்
இல: 6, பருத்தித்துறை வீதி,
(முதலாம் ஒழுங்கை, மக்ரவல்ஸ் அருகில்)
யாழ்நகர்.

(B: 2112

### ❋ சிந்தனைக்கு ❋

தலைகளை உடைப்பதும் ஜனநாயகமல்ல,
தலைகளை எண்ணுவதும் ஜனநாயகமல்ல;
— பேராசிரியர் லக்ஸ்கி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 10-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# நடைமுறையில் இல்லாதது நாடாளுமன்றத்தில் வருமா?

"பாராளுமன்ற பாரம்பரியங்களை மதிக்கும் தன்மை இப்பொழுது அருகி வருகின்றது. பாராளுமன்றத்தில் நடப்பவற்றைக் கலரியில் இருந்து பார்க்கும் மாணவர்கள் தங்கள் வகுப்பறை பாராளுமன்றத்தைவிட மேலானது. ஒழுக்கம் மிக்கதாக உள்ளது என்றே எண்ணுவார்" என்று பாராளுமன்றத்தில் பேசும்போது நீதி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் தெரிவித்தார்.

அமைச்சர் ஹமீத்தின் கவலை நியாயமானது. பாராளுமன்றத்தில் இன்று நடக்கும் அடிதடிகள் இழுபறிகள், ஆளும், எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகள் என்பன அவ்வாறே உள்ளன. அத்தோடு பாடசாலை மாணவர் தொடர்பாக ஹமீத் கூறியவையும் சரியானதே. சூழ்ச்சி, அதிகாரப்போட்டி, மோசடி என்பனவற்றிற்குப் பேர் போன அரசியல்வாதிகளின் சங்கமமான பாராளுமன்றத்திற்கும், வெள்ளை மனமும் நட்புத் தன்மையும் மேலோங்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையில் வேறுபாடு உண்டுதான். பாராளுமன்றத்தைவிட பாடசாலை எப்பொழுதும் மேலானதுதான்.

பிரித்தானியாவில் உருவாகிய 'ஜனநாயகமும்' அதன் அமைப்பான பாராளுமன்றமும், நீண்ட ஒரு பாரம்பரியத்தைக் கொண்டதுதான். பிரித்தானியாவில் இருந்து பாராளுமன்ற அமைப்பு முறையை இலங்கை இறக்குமதி செய்துகொண்டபோது பிரித்தானிய பாராளுமன்ற பாரம்பரியங்களையும் இறக்குமதி செய்து கொண்டது. பிரித்தானிய கனவான்மார்களின் இப்பாரம்பரியம் ஆரம்பத்தில் இலங்கைக் கனவான்மார்களினாலும் ஓரளவு பேணப்பட்டே வந்ததெனலாம். ஆனால் இப்பாரம்பரியங்கள் இன்று கேலிக்குரியதாக மாறி விட்டன.

ஜனநாயக அமைப்பின் சிறப்பு அமைப்பான பாராளுமன்றம் கேலிக்குரியதாகவும் மரபுகளையும், பாரம்பரியங்களையும் கைவிட்டுவிடுவதற்கு பாராளுமன்ற அமைப்பை உருவாக்கிய ஜனநாயகம் இங்கு கேலிக்குரியதானதே காரணமாகும். ஜனநாயக மரபுகளில் தனிமனித உரிமை, நேர்மையான தேர்தல், மாற்றுக்கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் என்பன இலங்கையில் ஒருபொழுதும் நடைமுறையில் இல்லை.

ஜனநாயக நாடுகளில் மக்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்க பல்வேறு சட்டங்கள் இருந்தன. ஒரு குற்றவாளி தண்டிக்கப்படாவிட்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது இச்சட்டங்களின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் இன்று மக்களையும், அவர்கள் உடமைகளையும் பாதுகாக்க வேண்டிய அரசாங்கமே அவற்றைச் சட்டத்திற்கு மீறி அழிவு செய்கின்றது. ஆயுதம் தாங்கிய குழுக்களைத் தனது மறைமுக கொலைப் படைகளாகக்கொண்டுள்ளது.

அரச படைகளினால் கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளையும், கணவன்மார்களையும் தமக்கு காட்டும்படி அன்னையர்கள் கோருவது இன்று சிறிலங்கா போன்ற ஜனநாயக நாடுகளின் தேசவிரோதச் செயலாகக் கருதப்படுகையில் ஜனநாயகத்தின் சிறப்பு அமைப்பான பாராளுமன்றம் மட்டும் எவ்வாறு மரபுகளையும், பாரம்பரியங்களையும் பேணக்கூடியதாக இருக்கும்.

பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பதில், அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கும், அவர்களின் பிரதிநிதிகளை வெளியேற்றுவதற்கும், பாராளுமன்றத்திற்கு வராமல் தடைவிதிப்பதற்கும் சட்டம் இயற்றும் பாராளுமன்றங்களில் அடிதடியை விட வேறு எதை எதிர் பார்க்கலாம்.

பாராளுமன்ற ஆட்சி முறையில் தேர்தல் முறை முக்கியமானதாகும். அமைதியான சூழலில் மக்களால் தமது சுயவிருப்பத்தின் பேரில் தெரிவு செய்யப்படுபவரே பாராளுமன்றத்தில் அங்கத்தவராகின்றார். ஆனால், சிறிலங்காவில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் இராணுவ வன்முறை தொடர்ந்து கொண்டிருக்கையில் தேர்தலை நடத்துதல் தேர்தல் வரன்முறைகளுக்கும், சட்டத்திற்கும் முரணானதாகும். இந்நிலையில், பாராளுமன்றத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட கண்ணியமானவர்கள் பாராளுமன்றத்திற்கு வருவார்கள் என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும். அடிதடிகளுக்குப் பேர்போனவர்களும் சட்ட ஒழுங்கை மதிக்காதவர்களுமே பாராளுமன்றத்திற்கு வர முடியும். அவர்கள் எவ்வாறு பாராளுமன்ற பாரம்பரியத்தை பேணுவார்கள் என எதிர்பார்க்க முடியும்?

இந்நிலையில், பாராளுமன்ற மரபுகள் பாரம்பரியங்கள் இன்று சிதைந்து வருவதற்குக் காரணம் கடந்தகாலத்தின் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளே ஒழிய வேறில்லை. ஜனநாயக அமைப்பு முறையைச் சிதைக்க பாராளுமன்றம் சட்டம் இயற்றும் போது, ஜனநாயகத்தின் சிறப்பம்சமான பாராளுமன்ற அமைப்பும் சிதைவது தவிர்க்க முடியாதது ஆகிறது.

# இருதய நோய்க்குரிய காரணிகளும் தடுப்பதற்குரிய சில வழிமுறைகளும்

சிர்மாறன்

மனிதரின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இடையூறற்ற இருதயத்தின் தொழிற்பாடு மிகவும் அவசியமாகும். தாயின் வயிற்றில் ஏறக்குறைய பதினாறு வாரக் கருவாக இருக்கும்போதே இருதயம் துடிக்கத்தொடங்குகின்றது. குழந்தை பிறக்கும் போது ஒரு நிமிடத்திற்கு 120 தடவைகள் வரை துடிக்கும் இருதயம், வளர வளர முதிர்ச்சியடைந்து ஒரு நிமிடத்திற்கு 72 முறை வயது வந்தவர்களில் துடிக்கிறது. இவ்வாறு இருதயம் ஒவ்வொரு முறையும் துடிக்கும் போதும் 70 மில்லிலீற்றர் இரத்தம் உடலுக்கும் 70 மில்லிலீற்றர் இரத்தம் சுவாசப் பைகளுக்கும் செலுத்தப்படுகின்றது. இதன் மூலமாகத்தான் உயிரின் அடிப்படைத்தேவைகளான 'ஒக்ஸிஜன்' மற்றும் சக்தியை வழங்கும் 'குளுக்கோஸ்' 'அமினோ அமிலம்' கொழுப்புச்சத்துகள் என்பன காவிச் செல்லப்படுகின்றன. அதேபோன்று உடலில் உண்டாகும் காபனீரொக்சைட்டு அமோனியா, 'யூரியா' போன்ற கழிவுப் பொருள்களை மீண்டும் காவி வருகின்றது. மேலும் உடலுக்குத் தேவையான "ஹோமோன்கள்" நொதியங்கள் என்பவற்றையும் காவிச்செல்கிறது.

**இருதயத்தில் ஏற்படும் நோய்கள்**

இதனை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். முதலாவதாக பிறப்பிலேயே ஏற்படுவது. இது 'இருதயத்தில் துவாரம் இருத்தல்' (Fallo's Tetrology) வால்வுகளில் பழுதிருத்தல் (Congenital Valve Defects) என்பனவாகும். பரம்பரையாக அல்லது, தாய் கருவுற்றிருக்கும் போது சில மருந்துகள் நோய்க்கிருமிகள் போஷாக்குப் பற்றாக்குறை என்பன மேற்கூறிய குறைபாடுகளை ஏற்படுத்தும்.

**வயது வந்தவர்களில்**

இவர்களில் ஏற்படுகின்ற நோயை மருத்துவரீதியில் 'மயோகார்டியல் இன்பார்சன்' (Myocardial Infarction என்றும், பேச்சு வழக்கில் 'ஹார்ட் அட்டாக்' அதாவது மாரடைப்பு என்றும் சொல்வார்கள்.

**மாரடைப்பிற்குரிய காரணங்கள்**

'மாரடைப்பு' என்கிற நோய் திடீரென ஏற்படுகின்ற கடுமையான நோய் என்றாலும், ஆரோக்கியமான இருதயத்தில் நீண்டகாலம் படிப்படியாக ஏற்படுகின்ற பாதிப்புக்களின் அடிப்படையில்தான் திடீரென்று இந் நோய் ஏற்படுகின்றது. இருதயத்திற்கு 'ஏற்றியம்' (Atrium) என்று மேலே இரண்டு சோணைகளும் வென்றிக்கல்ஸ் என்று கீழே இரண்டு சோணைகளும் உண்டு. 'கொரோனரி ஆர்ட்டறி' (Coronory Arteries என்கிற இரத்தக் குழாய்களே இருதயத்திற்குத் தேவையான இரத்தத்தை காவிச் செல்கின்றன. வயது வளர வளர, இக்குழாய்களின் உள்விட்டத்தில் 'ஆர்திரோ ஸ்கிலேரோசிஸ்' என்கிற (Artherosclerosis) ஒரு விதமாற்றம் ஏற்படுவதாலும், 'கொலஸ்ரோல்' (Cholosterol) எனகிற ஒருவித கொழுப்பு படிவதாலுமே, இரத்தக் குழாய்களின் உள்விட்டம் குறைவதாலுமே அல்லது திடீரென முற்றாக தடைப்படுவதாலுமே 'மாரடைப்பு' ஏற்படுகிறது.

**காரணிகள்**

உடலிலுள்ள சில வியாதிகள் 'மாரடைப்பு' ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கும். உதாரணமாக 'டயபிற்றீஸ்' என்கிற 'நீரிழிவு' நோய், உயர் இரத்த அழுத்த வியாதி, சிகரட் குடித்தல், அதிகமாக கொழுப்புச்சத்து சாப்பிடுதல், உடல் எடையில் பருமனாக இருத்தல் உடல் உழைப்போ, உடற்பயிற்சியோ செய்யாது சோம்பேறியாக இருத்தல் என்பன 'மாரடைப்பு' ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கும்.

**தடுப்பு முறைக்கு சில ஆலோசனைகள்**

'மாரடைப்பு' என்கிற கொடிய வியாதியை முற்றாக தவிர்க்க முடியாவிட்டாலும், முயற்சி எடுத்தால் முன்னேற்றம் தருமளவிற்கு குறைக்கலாம். உதாரணமாக, சிகரெட், பீடி, சுருட்டு குடிப்பவர்கள், படிப்படியாக, குடிக்கின்ற சிகரட்டின அளவையும் எண்ணிக்கையும் குறைப்பதனால் 'மாரடைப்பு' ஏற்படும் ஆபத்தை குறிப்பிடத்தக்களவுக்குக் குறைக்கலாம். அதேபோன்று 'டயபிற்றீஸ்' 'உயர் இரத்த அழுத்த' வியாதி உள்ளவர்கள் தமது நோயின் தன்மைகளையும் அறிகுறிகளையும் உணர்ந்து, தமக்குரிய கிளினிக்குகளுக்கு ஒழுங்காக செல்வதாலும், அங்கு தரப்படும் ஆலோசனைகளையும் மருந்துகளையும் கேட்டு நடப்பதாலும் 'டயபிற்றீஸ்' உயர் இரத்த அழுத்தம் போன்ற வியாதிகளை கட்டுப்பாட்டில் வைப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் ஆபத்தை ஓரளவுக்குக் குறைக்கலாம். மேலும், இந் நோய்கள் கட்டுப்பாட்டை மீறிப் போகின்றன என்று தெரிந்ததும் உடனடியாக அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கோ, வைத்தியரிடமோ சென்று ஆலோசனை பெறவேண்டும். இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் மருத்துவ வசதிகளும், மருந்துகளும் மிகவும் தட்டுப்பாடாகவும் கஷ்டமாகவுமிருப்பதாலும், நோய்கள் முற்றும்வரை கவனிக்காமல் இருந்துவிட்டு பிரச்சினைகள் (Complications) வந்ததும் மருந்துகளுக்கு அலையாமல், மருத்துவர்களை சொல்லுகின்ற ஆலோசனைகளைப் பின்பற்றுவதால் [illegible] மேற்பட்ட நோயை கட்டுப்படுத்தலாம்.

மேலும், உணவு விடயத்திலும், வயது வந்தவர்கள் அடிக்கடி முட்டை, இறைச்சி, அதிகளவு சீனி என்பன உண்டு உடல் பருமனையும் அதிகரித்து உடலிலுள்ள கொழுப்புச் சத்தையும் கூட்டி, நோயைத்தேடிக் கொள்ளாமல் கீரைவகைகள், மரக்கறிகள் பழவகைகள் மீன்வகைகள் என்பனவற்றை உணவாக உட்கொள்வதன் மூலம் மேற்கூறிய கொடிய வியாதிகள் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கலாம்.

வயது வந்தவர்களுக்கு கடினமான உடல்உழைப்பு மிகவும் அவசியம். உதாரணமாக தோட்டம் கொத்துதல், கிடங்குகள் வெட்டுதல், கிணற்றில் தண்ணீர் அள்ளுதல், [illegible], சயிக்கிள் ஓடுதல் என்பன. இவை ஒன்றையும் செய்யாதவர்கள் நாள்தோறும், காலையில் எழுந்ததும் அரைமணி நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். கயிறு அடித்தல், நின்ற இடத்தில நின்று துள்ளல், இருந்து எழுதல், உடற்பயிற்சிக்குரிய விசேட சயிக்கிள் ஓடுதல் என்பனவற்றில் ஏதாவதொன்றை சீராகவும் ஒழுங்காகவும் செய்ய வேண்டும். பாடசாலைகளில் மாணவர்கள் ஒவ்வொருநாளும் ஏதாவது ஒரு உடற்பயிற்சியைச் செய்ய வேண்டும். இறுதியாக நோய் வரும்வரை காத்திராது அதனை வரவிடாது தடுப்பதே மிகச்சிறந்த முறையாகும். இதற்கு ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் நாம் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தையும் அதன் மூலம் ஆக்கபூர்வமான நாட்டையும் உருவாக்கலாம்.

## அபிவிருத்தித் திட்டங்களின் விபரங்கள் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைமை அலுவலகங்களின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிக்கைகள் உதவி அரசாங்க அதிபர்களால் தத்தமது பகுதியில் உள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் பலவற்றை முன்னுரிமை அடிப்படையில தயார் செய்து செயலகத் திட்டமிடல் அலுவலகத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்களை இத்திணைக்களங்கள் ஆராய்ந்து சாத்தியமான திட்டங்களை மேற்கொள்ளும்படி அனுமதியும் இதற்கு வேண்டிய நிதியையும் அனுப்பி வைப்பதால மட்டுமே மேற்படி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். (க)

## இன்னும் நிவாரணமில்லை

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவ நடவடிக்கைகளால் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு சிறிலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட நிவாரணத்தொகை பெரும்பாலான குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகைசெயலகத்திற்கு திறைசேரியில் இருந்து அனுப்பி வைக்கப்படவில்லை என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (மு)

## மகளிர் தின கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

சர்வதேச மகளிர் தினம் தொடர்பாக கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் வலிகாமம் பிரசாரப் பொறுப்பாளர் மணியரசன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சௌரி, அரியாலை பிரதேசப் பொறுப்பாளர் பகீன். ஆகியோர் பங்கு கொண்டு உரையாற்றினர். திருமதி பரமேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கினார்.

## மரங்கள் இராணுவத்தால் தறிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 39 ஆம் கிராமம் 6 ஆம் வட்டாரத்தில் உள்ள தோட்டங்களில் நின்ற தென்னை, பனை மரங்களை கடந்த வியாழக்கிழமைகாலை 10.30 மணிக்கு வக்கிவெல்ல இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தறித்து முகாமிற்குக் கொண்டுசென்றுள்ளனர். (மு)

சந்திரசேகரிடம் தொடர்ந்தும்

# பிரதமர் அலுவல்களைக் கவனிக்க வெங்கட்ராமன் கோரிக்கை

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவையின் தலைவராகத் தொடர்ந்தும் இருந்து. பிரதமர் அலுவலகத்துடன் இணைந்த பணிகளையும், பாராளுமன்றப் பணிகளையும் நிறைவேற்றிடுமாறு திரு சந்திரசேகரிடம் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கடராமன் கேட்டுக் கொண்டுள்ளார். பிரதமருக்கு குடியரசுத் தலைவர் எழுதியுள்ள கடிதமொன்றில் இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. சட்டத்துறை வல்லுனர்களையும், அரசியல் சாசன நிபுணர்களையும் கலந்தாலோசனை செய்தபின் இம்முடிவுக்கு வந்திருப்பதாக திரு ஆர் வெங்கட்ராமன் கூறியுள்ளார்.

இதனிடையில் காங்கிரஸ் கட்சி தற்போது பதவி ஏற்க விரும்பவில்லை என்றும், இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடத்தும்படி குடியரசுத் தலைவரிடம் தாமும் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் கட்சித்தலைவர் ராஜீவ் காந்தி செய்தியாளரிடம் கூறினார்.

ஜனதா தள், ஜனதா தள் (எஸ்) கட்சி எம்.பிக்கள் இலர் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதாகத் தெரிய வருகிறது. மேலும் புதிதாகத் தேர்தல் நடத்துவதன் மூலம் யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத ஒரு நிலையே தொடரும் என முன்னாள் துணைப்பிரதமர் தேவிலால் கூறியுள்ளார்.

## ஷெல் தாக்கு

ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு சின்ன மூளாய்ப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

இதே தினம் 12 30 மணியளவில் காரைநகர், தோப்புக்காடு காவலரணில் இருந்து உயிலங்காட்டுப் பகுதியை நோக்கி முப்பதிற்கும் அதிகமான ஷெல்கள் ஏவப்பட்டன இதனைத் தொடர்ந்து சீநோர் கோவில் காவலரணில் இருந்தும் ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## சவூதி, சிரியாவுடன் பேச இஸ்ரேல் தயாராகவுள்ளது

(டெல்அவிவ்)

இஸ்ரேலியப் பிரதமர் ஷாமிர் சவூதி அரேபியாவுடனும், சிரியாவுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி மத்தியகிழக்கு விவகாரத்திற்கு தீர்வு காண விரும்புவதாக அறிவித்துள்ளார். இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ள கனேடிய அமைச்சருடன் பேசுகையில் ஷமிர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டார்.

இதனிடையில் வளைகுடாப் போரில் கூட்டுப் படையில் இடம்பெற்ற அரபு நாட்டுப் படைகளுக்கு 18,000மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத தளபாடங்களை விற்க அமெரிக்கா முன் வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது

## விஸ்தீரணம் 1010 சதுரமைல் 150 ஆயுதப்படை முகாம்கள்

(திருக்கோணமலை)

1010 சதுர மைல் விஸ்தீரணமுள்ள திருக்கோணமலை மாவட்டத்தில் மொத்தம் 150 சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் முகாம்கள் உள்ளன. சீனக்குடா விமானப்படை முகாமும், டொக்யாட்டில் உள்ள கப்பற்படைத் தளமும் பிரதான முகாம்களாகும்.

இவற்றைவிட 126 இராணுவ முகாம்களும், 24 பொலிஸ் நிலையங்களும் இங்குள்ளன.

மூன்று மைல் சுற்றுள்ள திருக்கோணமலை நகரத்தில் மாத்திரம் டொக்யாட் கடற்படைத்தளம் உட்பட 9 இராணுவ முகாம்களும், 3 பொலிஸ் நிலையங்களும் உள்ளன. இதன் பிரகாரம் கால் மைலுக்கு ஒரு இராணுவ முகாம் அல்லது ஒரு பொலிஸ் நிலையம் திருக்கோணமலை நகரில் உள்ளது.

திருக்கோணமலை மாவட்டத்தில் பெரும்பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இலர் படைகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சர்வோதய, பௌத்த நிறுவனங்களின் மேற்பார்வையில் தென்பகுதி சிங்களவர் தமிழரின் நிலங்களில் குடியேற்றப்படுகின்றனர். புதிய சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதற்குப் படைகளும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

## ஹிஸ்புல்லாவிடம் பதவி விலக கட்சித் தலைமை கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்திற்கு மட்டக்களப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட எம். பி. எம். எல் ஏ. எம். ஹிஸ்புல்லா அவர்களைப் பதவி விலகுமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது. கட்சித் தலைமையகத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் இடம்பெற்ற அரசியல் அதியுயர் பீடக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் கீழ் இந்தக் கோரிக்கை ஹிஸ்புல்லாவிற்கு விடப்பட்டுள்ளது

இது தொடர்பாக ஹிஸ்புல்லா விடுத்த பத்திரிகை அறிக்கையொன்றில் பதவி விலகுமாறு கோரி இதுவரை எதுவித தகவலும் தனக்கு கட்சியிடமிருந்து வரவில்லை என்றும், இந்தச் செய்தியை பத்திரிகை மூலம் அறிந்து தான் கவலை கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## வவுனியா நகரப் பகுதியில் ஆயுதக்குழு அடாவடித்தனம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் வசிக்கும் தமிழ்க்குடும்பங்கள் இரவு வேளைகளில் ஆயுதக்குழு ஒன்றின் அட்டகாசத்தைத் தாங்கமுடியாது தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும தெரிவிக்கப்படுவதாவது, இரவானதும் வீட்டின் கதவைத்தட்டும் குழுவினர், வீட்டில் உள்ளோர் அச்சத்தில் சத்தம்போடாமல் இருக்கும் சமயம், வீட்டின் கதவை உடைத்து அங்குள்ள இளம்பெண்களுடன் பலாத்கார முயற்சியில ஈடுபடுகின்றனராம் இதற்கான வாய்ப்பற்ற சமயத்தில் வீட்டிலுள்ள பெறுமதிவாய்ந்த பொருள்களை அபகரித்துச் செல்கின்றனராம்.

கடந்த 3 ஆம் திகதி வவுனியா யூனிகுவாட்டர்ஸ் பகுதியில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவினர், வீட்டில் உள்ளவர்கள் சத்தமிடவே தயங்காது ஓட்டம் எடுத்தனராம்.

வைரவர்புளியங்குளம், சூசைப்பிள்ளையார் குளம் பகுதிகளில் தினமும் இவ்வாறான நடவடிக்கையில் மேற்படிகுழுவினர் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

அரசாங்க குழு தீர்மானம்

## பாராளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்திற்குச் செல்வதில்லை

(கொழும்பு)

பாராளுமன்ற அலுவல்களைத் தீர்மானிக்கும் குழுக் கூட்டங்களில் இனிக் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அரசாங்கப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது இது தொடர்பாக சபை முதல்வரும், அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கா கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கையில் பாராளுமன்ற அலுவல்மீதான குழுக் கூட்டத்தில எடுக்கப்படும் முடிவுகளை அனுசரித்து நடந்து கொள்வதில் எதிர்க்கட்சிகள் தவறியுள்ளமையே அரசாங்கபாராளுமன்றக்குழு எடுத்த இந்தத் தீர்மானத்திற்கு காரணம் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

42 நாள்

வில்லை. இருந்தும், பாடசாலைகள் 1990 வைகாசி 18 ஆம் திகதியிலிருந்து மார்கழி மாதம் வரை சுமார் 42 நாட்கள் வரை நடந்தன.

பாடசாலைக்கு மாணவர்களும் வந்தனர். மாணவரொருவர் இநாட்கள் பாடசாலைக்கு வந்திருந்தால் ரூபா 126 வரை பெற்றிருக்கும் தகைமை பெறுகிறார். அப்படியாயின் 1990 வைகாசி முதல் மார்கழி மாதம் வரையிலான உணவு முத்திரை விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதா அல்லதுமறுக்கப்பட்டுள்ளதா? யாழ். மாவட்டத்திலுள்ள இரண்டரை லட்சம் மாணவர்களுக்கும் மேற்படி 42 நாட்களுக்கும் உணவு முத்திரை வழங்க உடன் நடவடிக்கையை யாழ். கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டாக வேண்டும் என்று பெயர் வெளியிட விரும்பாத அதிபர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மீனவரைத்

னரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் இப்படகில் இருந்த எரிபொருளை இவர்களின வலைகள்மீது ஊற்றி தீமூட்ட எத்தனித்தபோது, தீப்பெட்டி இடைக்காமல் போகவே, மீனவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர் விசாரணைக்காக இவ்விருவரையும் காங்கேசன்துறைக்குகொண்டு சென்றபோது, கும்பிட்டு அழுது குழறியதைத் தொடர்ந்து நடுக்கடல்வரை படகுடன் இழுத்துச் செல்லப்பட்டு கைவிடப்பட்டனர். நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இருவரும், காற்றாலும் நீரோட்டத்தாலும் இழுக்துச் செல்லப்பட்டு 7ஆம் திகதி காலை சுண்டிக்குளத்துக்கு அருகாமையில் கரை ஒதுங்கியுள்ளனர். படுகாயங்களுக்குள்ளான இவ்விருவரையும் அவ்வூர் மக்கள பராமரித்து நேற்று முன்தினம் 8ஆம் திகதி படகுடன் முள்ளிவாய்க்காலுக்கு அனுப்பி வைத்தனர். (செ. த. மை.)

மோட்டோர்

கொள்ளப்பட்டது.

இதில் விளான தோட்டத்தைச் சேர்ந்த திரு ப. மகேந்திரன் 28 வயது), மூன்று பிள்ளைகளின் தாயான திருமதி மகேந்திரன் (25 வயது) ஆகியோர் படுகாயமடைந்ததுடன் திரு. சுவாமிநாதன் என்பவருடைய வீடும் பலத்த சேதமடைந்தது. (மு)

வவுனியாவில்

பதினொருமணிவரை தாண்டிக்குளம் முகாமில் இருந்து அதனையண்டிய காட்டுப் பகுதியைநோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. இத்தாக்குதல்களில் குறிப்பிடத்தக்க சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன (மு)

விசேட பரீட்சை

எதிர்வரும் ஏப்ரில் 22 ஆம் திகதியிலிருந்து மேமாதம் 13 ஆம் திகதி வரை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்களுக்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்படும் அவர்கள் தமது விண்ணப்பங்களை இந்த மாதம் 15 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும். தபால் சேவை சீராக இல்லாதிருந்தால், விண்ணப்பங்களைப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு பரீட்சைத் திணைக்களம் பணித்துள்ளது.

வண்ணிப்

ரிக்கும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன.

விமானத்தாக்குதல் இந்தப் பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் பெருந்தொகையாக பொது மக்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது (மு)

உடன் வீடு

டும் விடப்போவதாக கடற்படையினர் எச்சரித்துள்ளதாக கூறப்படுகிறது. (22)

பொருளாதாரத்தை

யெழுப்ப பெண்கள் முன்வர வேண்டும்

இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் நேற்றைபதினம் யாழ் இந்துக் கல்லூரியில் நடாத்திய பெண்கள் மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியயாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ துரைராஜா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது பெண்கள் கல்வித்துறையில் தற்போது முன்னேறி வருகிறார்கள். யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்போரில் அறுபதுசதவீத மானோர் பெண்களாகவே உள்ளார்கள். இதேபோல பொருளாதாரத் துறையிலும் பெண்கள் துரிதமாகமுன்னேற வேண்டும் என்றார்.

மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் திருமதி சித்திரலேகா மௌனகுரு சிறப்புரையாற்றினார். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெயவீரசிங்கம். ஆசிரியை திருமதி அம்மன்கிளி முருகதாஸ் ஆகியோரும் உரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (மு)

## வெளியூர் மக்கள் நயினாதீவில தங்கத் தடை

(புங்குடுதீவு)

நயினாதீவில வெளியிடங்களைச் சேர்ந்த எவரும் தங்கியிருக்கக் கூடாதென அங்குள்ள சிறிலங்கா கடற்படையினர் அறிவித்துள்ளார்களாம். சில தினங்களுக்கு முன்னர் ஒலிபெருக்கி மூலம் மேற்படி அறிவித்தலை விடுத்துள்ள படையினர் சொந்த விடயமாக நயினாதீவிற்குச் செல்லும் வேற்றிடங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு தரித்து நிற்காது உடனே திரும்பிவிட வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இவர்கள் முகாமில் தடுத்துவைக்கப்பட்டு தண்டிக்கப்படுவதுடன் இவர்களது அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்களாம். (22)

## வடிசாலை ஊழியர்கள் நிரந்தர நியமனத்து கோரிக்கை

(வவுனியா)

வவுனியா அரசவடிசாலைக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 48 தமிழ் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வேண்டும் எனக்கோரி கொழும்பிலுள்ள தொழில் ஆணையாளரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

பல வருடகாலமாக இந்தக் கூட்டுத்தாபனத்தில் தொழில் புரிந்து வருகின்ற போதிலும் தமக்கு இன்னும் நிரந்தர நியமனம் அரசினால் வழங்கப்படவில்லை என்று அவர்கள் தொழில் ஆணையாளரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஜூன் மாதத்தின்பின்னர் இவ்வடிசாலைக் கூட்டுத்தாபனம் செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக தற்காலிக ஊழியர்களில் பலர் பலகஷ்டங்களை எதிர்நோக்கி தொழில் எதுவுமற்று அல்லல்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

ஒரு தமிழ

பத்துமணியளவில் முட்டிச்சேனை என்னுமிடத்தைச் சுற்றி வளைத்து பு இரத்தினசிங்கம் என்பவரைச் சுட்டுக் கொன்றதுடன் பத்து வீடுகளையும் எரித்துள்ளனர். (மு)

தாயாரைத்

தாயாரைப் பலமாகத் தாக்கியுள்ளார் ஆத்திரமுற்ற தாயார் வீட்டைவிட்டு வெளியேறினார், இதனால் மனமுடைந்த நிலையில் காணப்பட்ட மகனான கணேசமூர்த்தி (வயது 23) வீட்டின் அறைக் கதவைப் பூட்டிவிட்டு கழுத்திற் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். (ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.